**செ.வெ.எண்.188/2018** **நாள்: 10-05-2018**

**காஞ்சிபுரம் மாவட்டம், திருப்போரூர் வட்டம் 1427ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் 1427ஆம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் அனைத்து வட்டங்களிலும் நடைபெறுகிறது. அதன்படி திருப்போரூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் வருவாய் தீர்வாய அலுவலராக வருவாய் தீர்வாயம் நடத்தி கணக்குகளை தணிக்கை செய்து வருகிறார். இதுபோன்று உத்திரமேரூர் வட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களும், காஞ்சிபுரம் வட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) அவர்களும், செங்கல்பட்டு வட்டத்தில் காஞ்சிபுரம் தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டங்கள்) அவர்களும், வாலாஜாபாத் வட்டத்தில் காஞ்சிபுரம் வருவாய் கோட்ட அலுவலர் அவர்களும், பல்லாவரம் வட்டத்தில் தாம்பரம் வருவாய் கோட்ட அலுவலர் அவர்களும், திருபெரும்புதூர் வட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) அவர்களும், திருக்கழுக்குன்றம் வட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலஎடுப்பு) அவர்களும், ஆலந்தூர் வட்டத்தில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை அலுவலர் அவர்களும், மதுராந்தகம் வட்டத்தில் காஞ்சிபுரம் உதவி ஆணையர் (கலால்) அவர்களும், செய்யூர் வட்டத்தில் மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் அவர்களும், சோழிங்கநல்லூர் வட்டத்தில் தாம்பரம் தகவல் தொழிற்நுட்ப துரித சாலை திட்ட தனித்துறை ஆட்சியர் (நிலஎடுப்பு) அவர்களும், தாம்பரம் வட்டத்தில் சென்னை விமான நிலைய விரிவாக்கத் திட்ட தனித்துணை ஆட்சியர் (நிலஎடுப்பு) அவர்களும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் தீர்வாய அலுவலர்களாக நியமிக்கப்பட்டு கிராம கணக்குளை தணிக்கை செய்து வருகின்றனர்.

திருப்போரூர் வட்டத்தில் 1427ம் பசலிக்கான வருவாய் தீர்வாயம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப. அவர்கள் தலைமையில் நடைபெற்று வருகின்றது. மொத்தம் 7 நாட்கள் நடைபெறும் வருவாய் தீர்வாயத்தில் திருப்போரூர், நெல்லிக்குப்பம், கரும்பாக்கம், கேளம்பாக்கம், மாம்பாக்கம், மானாமதி, பையனூர் ஆகிய குறுவட்டத்தைச் சேர்ந்த பொது மக்களிடமிருந்தும் மனுக்கள் பெறப்பட்டு இவற்றில் பட்டா மாற்றம், குடும்ப அட்டை, விதவை மற்றும் முதியோர் உதவித்தொகை, இலவச வீட்டுமனைப்பட்டா, நலிந்தோர் உதவித்தொகை தொடர்பான மனுக்களும் பெறப்பட்டு, மேற்படி பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்டுள்ளார். மேலும் பிற துறைகள் தொடர்பான மனுக்களை சம்மந்தப்பட்ட துறைகளுக்கு அனுப்பி ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுத்து இறுதி ஆணை பிறப்பிக்கவும் உத்தரவிட்டுள்ளார். வருவாய் தீர்வாயத்தின் இறுதி நாளான 22.05.2018 செவ்வாய் கிழமை மாலை ரயத்து கூட்டம் வருவாய் தீர்வாய அலுவலர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளது. இன்று வருவாய் தீர்வாயத்தில் உடனடி தீர்வாக 3 நபர்களுக்கு முதியோர் மற்றும் ஊனமுற்றோருக்கான மாதாந்திர உதவித்தொகைக்கான ஆணையும், 3 பேருக்கு வீட்டுமனை பட்டாக்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி.மரகதம் குமரவேல், காஞ்சிபுரம் மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநர் திரு.ஆறுமுகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக மேலாளர் (நீதியியல்) திரு.கே.இளங்கோவன், திருப்போரூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு.பிரகாஷ்பாபு, திரு.தண்டபாணி, திருப்போரூர் வட்டாட்சியர் திரு.க.ராஜ்குமார் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

செய்தி வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.